**தலைப்பு 171 – உயர் கல்வி அமைச்சு மற்றும் அந்த அமைச்சின் கீழுள்ள ஆணைக்குழு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2014 ஆம் ஆண்டு**

---

இந்த அறிக்கையின் 1 ஆம் பந்தி முதல் 2 ஆம் பந்தி வரை அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள ஆணைக்குழுவின் கணக்குகள் தொடர்பான பொதுத் தகவல்கள் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் 3 ஆம் பந்தி முதல் 4 ஆம் பந்தி வரையான பந்திகளுக்குரிய கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## 1. அமைச்சின் கீழுள்ள ஆணைக்குழு

| தலைப்பு | ஆணைக்குழு |
|---|---|
| 214 | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு |

### 1.1 கணக்காய்வின் நோக்கெல்லை

மேலே 1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட உயர் கல்வி அமைச்சினதும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினதும் 2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக்கூற்றுக்கள் பதிவேடுகள், ஆவணங்கள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை கீழே குறிப்பிடப்படும் திகதிகளில் அந்த அமைச்சினதும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினதும் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கும் கணக்கீட்டு உத்தியோகத்தர்களுக்கும் வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான

அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

| தலைப்பு | அமைச்சு மற்றும் ஆணைக்குழு | முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை வழங்கப்பட்ட திகதி |
|---|---|---|
| 171 | உயர் கல்வி அமைச்சு | 2015 ஒக்தோபர் 06 |
| 214 | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு | 2015 ஆகஸ்ட் 26 |

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்**

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய சட்டரீதியான ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பராமரித்துச் செல்லல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பராமரித்துச் செல்லல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2. கணக்குகள்**

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**(அ) மொத்த ஏற்பாடும் செலவும்**

அமைச்சிற்கும் அந்த அமைச்சின் கீழுள்ள பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 39,963.7 மில்லியனான மொத்த தேறிய ஏற்பாட்டில் மீளாய்வாண்டின் இறுதிவரையில் ரூபா 38,746.3 மில்லியன் தொகை

பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், அமைச்சினதும் ஆணைக்குழுவினதும் தேறிய ஏற்பாடுகளிலிருந்தான சேமிப்புக்கள் முறையே ரூபா 69.4 மில்லியன் மற்றும் ரூபா 1,148 மில்லியன் வரையிலான வீச்சில் அதாவது தேறிய ஏற்பாட்டில் 0.8 சதவீதம் மற்றும் 3.6 சதவீதம் ஆக இருந்தன. விபரம் பின்வருமாறாகும்.

| தலைப்பு | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| 171 | 8,177.7 | 8,108.3 | 69.4 | 0.8 |
| 214 | 31,786.4 | 30,638.2 | 1,148.2 | 3.6 |
| மொத்தம் | **39,964.1** | **38,746.5** | **1,217.6** | 3.0 |

## 2.2 முற்பணக் கணக்குகள்

### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

**பாராளுமன்றத்தால் அனுமதிக்கப்பட்ட எல்லைகள்**

அமைச்சிற்குரிய அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளுக்காக பாராளுமன்றத்தால் அனுமதிக்கப்பட்ட பின்வரும் எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| விடய இல. | செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|
| | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 17101 | 5.0 | 4.9 | 2.2 | 4.2 | 18.0 | 13.4 |

## 2.3 பொது வைப்புக் கணக்குகள்

அமைச்சின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வைப்புக் கணக்கின் மீதி ரூபா 355.7 மில்லியனாக இருந்தது.

## 2.4 கணக்காய்வு அவதானிப்புகள்

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதியறிக்கைகள் மற்றும் புத்தகங்களின் பிரகாரம், உயர் கல்வி அமைச்சினதும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினதும் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்ட பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களுக்கு உட்பட்டு திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 முதல் 4 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 3. தலைப்பு 171 – உயர் கல்வி அமைச்சு

## 3.1 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

அமைச்சினால் கீழே காண்பிக்கப்படுகின்ற சில பதிவேடுகள் பேணப்படாதிருந்ததுடன் சில பதிவேடுகள் நாளதுவரையாக்கப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேட்டு வகை | உரிய பிரமாணம் | அவதானிப்பு |
|---|---|---|---|
| (அ) | கணனி, உபபாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பாக நிலையான சொத்துப் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | நாளதுவரையாக பேணப்பட்டிருக்கவில்லை |
| (ஆ) | சில்லறைக் காசேடு | நிதிப்பிரமாணம் 446 | பேணப்பட்டிருக்கவில்லை |

| | | | |
|---|---|---|---|
| (இ) | அடியிதழ் புத்தகப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 341 | பேணப்பட்டிருக்கவில்லை |
| (ஈ) | வாகனப்பட்டியல் பதிவேடு | நிதிப்பிரமாணம் 1647(உ) | நாளதுவரையாக பேணப்பட்டிருக்கவில்லை |

**3.2 கணக்காய்வு ஐயவினாக்களுக்குப் பதிலளித்தல்**

அமைச்சிற்கு மீளாய்வாண்டின் போது சமர்ப்பிக்கப்பட்ட மூன்று கணக்காய்வு ஐய வினாக்களுக்கு 2015 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரையிலும் பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.3 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**3.3.1 பாதீட்டு முரண்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 04 செலவின விடயங்களுக்கான ரூபா 2,010,000 கூட்டுத்தொகையான நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தினால் அமைச்சிற்கு கட்டுநிதி எதிர்பார்த்த பிரகாரம் வழங்கப்படாமையால் அந்த நிதியேற்பாட்டிலிருந்து ரூபா 835,143 தொகை மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 1,174,857 கூட்டுத்தொகை அதாவது செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட தேறிய நிதியேற்பாட்டில் 9 சதவீதம் முதல் 82 சதவீதம் வரையான வீச்சில் நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 02 செலவின விடயங்களுக்கான ஒதுக்கப்பட்ட ரூபா 27,993,968 கூட்டுத்தொகையான மொத்தத் தேறிய நிதியேற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

(இ) 03 செலவின விடயங்களுக்கு ரூபா 9,633,003 மிகை நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டமையின் காரணமாக நிதியேற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய

நிதியேற்பாட்டில் 67 சதவீதம் முதல் 82 சதவீதம் வரையான வீச்சினைக் கொண்டிருந்தது.

(ஈ) வெளிநாட்டு உதவி தொடர்பான உள்நாட்டு நிதியத்தில் ரூபா 87 மில்லியன் தேறிய நிதியேற்பாட்டில் ரூபா 61.8 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் அதன்படி சேமிப்பு 29 சதவீதமாக இருந்தது.

## 3.4 பொது வைப்புக் கணக்கு

------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஐக்கிய நாடுகளின் கல்வி, விஞ்ஞான மற்றும் கலாசார அமைப்பினால் நடாத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டத்தின் செலவினத்திற்காக 21 ஆம் நூற்றாண்டிற்கான உயர் கல்விச் செயற்திட்டத்திலிருந்து உயர் கல்வி அமைச்சிற்கு வழங்கப்பட்ட ரூபா 956,760 தொகை உரிய செயற்பாடுகளில் பயன்படுத்தப்படாது பொது வைப்புக் கணக்கில் 2015 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரையிலும் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) பல்வேறு செயற்பாடுகளுக்காக அமைச்சுக்குக் கிடைத்து பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்ட ரூபா 2,610,629 தொகை தலைமைத்துவப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்திற்கென ஈடுபடுத்தப்பட்டிருந்தது.

## 3.5 அரசாங்க உத்தியோகத்தருக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்று

------------------------------------------------------------------------------------------------

17101 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகள் தொடர்பான 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக்கூற்றின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 455,328 ஆக இருந்ததுடன் அதில் நிலுவையாக

இருந்த ரூபா 290,210 தொகையான மீதி 8 வருடங்கள் முதல் 21 வருடங்கள் வரையான காலம் கொண்டுவரப்பட்டிருந்த போதிலும், அந்த நிலுவையாக இருந்த கடன் மீதியை அறவீடு செய்வதற்கு அமைச்சு தவறியிருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

(i) நிலுவையாக இருந்த காலம் 21 வருடங்கள் முதல் 23 வருடங்கள் வரையிலான ஏனைய அரசாங்க நிறுவனங்களுக்கு இடமாற்றலாகிச் சென்ற மூன்று உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 35,690 கூட்டுத்தொகையானது மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2006 ஆம் ஆண்டின்போது சேவையை விட்டுச் சென்ற ஊழியரொருவரிடமிருந்து ரூபா 58,926 தொகை அறவிடவேண்டியிருந்த போதிலும் 2015 யூன் 30 ஆந் திகதி வரையிலும் அந்தக் கடன் மீதியை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) 1991 ஆம் ஆண்டு முதல் 1994 ஆம் அண்டு வரையான காலத்தில் தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சியளித்தல் திணைக்களத்திற்கு கையளிக்கப்பட வேண்டிய ரூபா 175,594 கூட்டுத்தொகையான 09 கடன் மீதிகள் 20 வருடங்கள் கடந்திருந்த போதிலும் அந்த மீதி தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

**3.6 சொத்துக்கள் முகாமைத்துவம்**

-----------------------------------------------------------

அமைச்சின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் வெளிக்கப்பட்டன.

**(அ) நடைமுறையல்லாச் சொத்துக்கள்**

-----------------------------------------------------

அமைச்சில் ரூபா 18,700,000 கூட்டுப்பெறுமதியான மூன்று வாகனங்கள் நடைமுறையல்லாச் சொத்துக்கள் தொடர்பான அசைவு அறிக்கையில் உள்ளடக்கப்படாதிருந்ததுடன் ரூபா 7,800,000 கிரயமான வாகனமொன்று மீளாய்வாண்டின் போது கைதவிர்க்கப்பட்டிருந்த போதிலும் அதன் பெறுமதி அந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்**

-----------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2015 யூலை 23 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2014 ஆம் ஆண்டிற்குரிய பொருள் மெய்மையாய்வுச் சபை அறிக்கையிலிருந்து சுட்டிக்காண்பிக்கப்பட்ட மிகை, பற்றாக்குறை மற்றும் ஏனைய சிபாரிசுகள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2014 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வின் போது 15 பொருள் விடயங்கள் மெய்மையாய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) 2013 ஒக்தோபர் மாதத்தின் போது உயர் கல்வி அமைச்சு ரூபா 3,955,370 பெறுமதியான மின் பிறப்பாக்கி இயந்திரமொன்றைக் கொள்வனவு செய்திருந்ததுடன் 2014 ஆம் ஆண்டின் போது அதற்காக ரூபா 356,459 கூட்டுத் தொகை பராமரிப்பு மற்றும் சேவை நடவடிக்கைகளுக்காக செலவிடப்பட்டிருந்த போதிலும் அந்த சொத்துக்கள் பௌதீக பரிசோதனைக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) வெளித்தரப்பினருக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள்**

அமைச்சிற்குச் சொந்தமான மோட்டார் வாகனமொன்று பேராதனை பல்கலைக்கழகத்திற்கு 2014 நவம்பர் 04 ஆந் திகதி விடுவிக்கப்பட்டிருந்ததுடன் அந்த வாகனத்தை முறையாகக் கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) தீர்க்கப்படாத பொறுப்புக்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அமைச்சின் 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 01 வருடத்திற்குக் குறைந்த தீர்க்கப்படாத பொறுப்புக்களின் பெறுமதி ரூபா 9,259,284 ஆகும்.

(ii) ஒதுக்கீட்டுக் கணக்கில் டீ.ஜீ.எஸ்.ஏ.8 படிவத்தில் ரூபா 385,675 பொறுப்புக்கள் குறைவாகப் பதியப்பட்டிருந்தது.

## 3.7 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

தெரிவுப் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்படுகின்றது.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) நியதிச்சட்ட ஏற்பாடுகள் | | |
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் உறுப்புரையின் 149 ஆவது உறுப்புரை | 18,445,037 | பட்டத்தை வழங்கும் நிறுவனமாக அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களை ஏற்றுக்கொள்வதற்காகவும் அந்த நிறுவனத்திற்காக தேவையான அதிகாரங்களை கையளிப்பதற்காகவும் மதிப்பீட்டுச் செயற்பாட்டிற்குரிய உயர்கல்வி அமைச்சினால் உரிய நிறுவனங்களிலிருந்து அறவிடப்பட்ட நிதியை ஒன்றிணைந்த நிதியத்திற்கு செலவு வைப்பதற்கு பதிலாக பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டு அதன் மூலம் செலவிடப்பட்டிருந்தது. |
| (ஆ) சனாதிபதி செயலகத்தின் சுற்றறிக்கை | | |
| 2010 மே 14 ஆந் திகதிய சீஏ/1/17/1 ஆம் இலக்க அரசாங்க செலவின முகாமைத்துவ சுற்றறிக்கையின் 3(1) மற்றும் 4(1) ஆம் பந்திகள் | 1,029,380 | அமைச்சினதும் பிரதி அமைச்சரினதும் பாவனை மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக ஆகக்கூடிய உத்தியோகபூர்வ வாகனங்களின் எண்ணிக்கை 3 ஆக இருந்த போதிலும் அந்த எல்லையினை விஞ்சி 7 வாகனங்கள் அமைச்சருக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் மாதாந்தம் உரித்தான எரிபொருள் அளவினை விஞ்சி எரிபொருளும் மீளளிப்புச் செய்யப்பட்டிருந்தது. |

(இ) பொது நிர்வாகச் சுற்றறிக்கை

---

| | |
|---|---|
| 2009 மார்ச் 05 ஆந் திகதிய 833,460 10/2007(1) ஆம் இலக்க சுற்றறிக்கை | அமைச்சருக்கு வருடாந்தம் உரித்தான வீட்டு வாடகை படிகளுக்குப் பதிலாக அந்த எல்லையினை விஞ்சி மின்சாரம் மற்றும் நீர்ப்பட்டியல்கள் மீளளிப்புச் செய்யப்பட்டிருந்த போதிலும் மேலதிகமாகச் செலுத்தப்பட்ட தொகையை மீள அறவீடு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3.8 வெளிநாட்டுதவி செயற்திட்டம்

---

மீளாய்வாண்டின் போது அமைச்சினால் வெளிநாட்டு நிதியீட்டத்தின் கீழ் ரூபா 1,502,230,000 கூட்டுத்தொகையான மதிப்பீடு செய்யப்பட்ட கிரயத்தில் 10 செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருந்தன. அதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 1,448,856,608 தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வெளிநாட்டுதவி செயற்திட்டங்களின் செயலாற்றல்

---

தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் அபிவிருத்தி செயற்திட்டத்தில் விளையாட்டரங்கு, கேட்போர்கூடம் மற்றும் சிற்றுண்டிச்சாலை நிர்மாணிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படாதிருந்ததுடன் செயற்திட்டக் காலம் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு முடிவுறுத்தப்பட வேண்டியிருந்தது. அந்த ஐந்து நிர்மாணங்களின் பௌதீக முன்னேற்றம் 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 40 சதவீதத்தை விடக் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.

(ஆ) வெளிநாட்டுதவி செயற்திட்டங்களில் உள்ளடக்கப்பட்ட சில நிர்மாணங்கள் கைவிடப்பட்டமை

---

தென்கிழக்கு பல்கலைக்கழக அபிவிருத்தி செயற்திட்டத்தின் கட்டம் 1-B இல் உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டதன் படி 11 நிர்மாணங்கள் உத்தேசிக்கப்பட்டிருந்ததுடன் முறையான அங்கீகாரமின்றி அதில் 03 நிர்மாணங்கள் இரத்துச் செய்யப்பட்டிருந்தன.

(இ) செயற்திட்டக் கணக்குகளில் காசு மீதி

---

உயர் தொழில்நுட்ப நிறுவனத்தை அபிவிருத்தி செய்தல் மற்றும் நாளதுவரையாக்கும் செயற்திட்டம் 2011 திசெம்பர் மாதத்தின் போது பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும், அதன் எஞ்சிய தொகையான ரூபா 772,987 தொகை திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்தக் காசு மீதி வங்கி நடைமுறைக் கணக்கில் விளைவற்று நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(ஈ) வெளிநாட்டு செயற்திட்டங்களைக் கலைத்தல்

---

உயர் தொழில்நுட்ப நிறுவனத்தை அபிவிருத்தி செய்தல் மற்றும் நாளதுவரையாக்கும் செயற்திட்டம் 2011 திசெம்பர் மாதத்தின் போது பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும், அந்த செயற்திட்டத்தின் கலைத்தல் கணக்கு 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) செயற்திட்டம் குறிப்பிட்ட திகதியில் ஆரம்பிக்காமை

---

2014 ஆம் ஆண்டின் போது ஆரம்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட கிரயம் ரூபா 575 மில்லியன் தொகையான கிளிநொச்சி பொறியியல் பீடம் மற்றும் விவசாய பீடம் என்பவற்றின் நிர்மாண நடவடிக்கைகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 21 ஆம் நூற்றாண்டிற்கான உயர் கல்வி செயற்திட்டம்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2007 ஏப்ரல் 05 ஆந் திகதிய 33 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் படி செயற்திட்ட பதவியணியினரை ஆட்சேர்த்தல் மற்றும் சம்பளம் செலுத்துதல் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், அங்கீகரிக்கப்பட்ட 22 பதவியணியினர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்காது உயர்ந்த சம்பளத்துடன் ஒப்பந்த அடிப்படையில் 22 உத்தியோகத்தர்கள் சேர்க்கப்பட்டிருந்தனர்.

(ii) இலங்கை உயர் தொழில்நுட்ப பிரிவிற்காக தகைமை மாதிரியொன்றை அபிவிருத்தி செய்வதற்கு 2014 யூன் மாதத்தின் போது 5,000 புத்தங்களை அச்சிடுவதற்கு ரூபா 1,534,999 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், அந்தப் புத்தகங்களில் 4,750 பிரதிகள் 2015 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையிலும் உரிய நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படாது செயற்திட்ட அலுவலகத்தில் விளைவற்றுக் காணப்பட்டது.

(iii) இரண்டு வளப் பங்களிப்பாளர்களுக்காக அவர்களுடன் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கைகளில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு மேலதிகமாக மீளாய்வாண்டின் போது போக்குவரத்துச் செலவினத்திற்காக ரூபா 2,037,965 கூட்டுத்தொகை செலவிடப்பட்டிருந்தது.

(iv) நிதி, திட்டமிடல் அமைச்சின் 2010 ஒக்தோபர் 11 ஆந் திகதிய 01/2010/01 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 3(iii) ஆம் பந்தியின் படி வெளிநாடு சென்றுள்ள உத்தியோகத்தர்களுக்காக அமைய மற்றும் இணைந்த படிகள் கொடுப்பனவு செய்யப்படவேண்டிய போதிலும், கல்வி மற்றும் செயலமர்வுகளுக்காக வெளிநாடு சென்றுள்ள 06 உத்தியோகத்தர்களுக்கு அமைய மற்றும் இணைந்த படிகள் ரூபா 119,383 தொகை கூடுதலாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(v) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் XIV ஆம் அத்தியாயத்தின் 3 ஆவது பிரிவின் பிரகாரம் அரசாங்கத்திற்கு ஆகக் குறைந்த செலவினமொன்று ஏற்படும் வகையில் கடமைப் பிரயாணங்களில் ஈடுபட வேண்டிய போதிலும், 2014 ஆம் ஆண்டின் போது முறையான அங்கீகாரமின்றி ரூபா 186,400 கூட்டுத்தொகையான உள்ளக விமானப் பயணச் செலவினங்களுக்காக செயற்திட்டத்திலிருந்து கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(vi) செயற்திட்டத்திற்கு மதியுரைச் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்காக குறுகிய காலத்திற்கு நியமிக்கப்பட்ட 04 மதியுரையாளர்களுக்கு வெளிநாட்டுப் பயிற்சியினை வழங்குவதற்கு மீளாய்வாண்டின் போது ரூபா 2,859,453 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(vii) வெளிநாட்டு மாநாடொன்றில் பங்குபற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த உத்தியோகத்தரொருவருக்கு செயற்திட்டத்தினால் ரூபா 432,722 தொகை பதிவுக் கட்டணம், விமானப் பயணச்சீட்டு மற்றும் கடவுச்சீட்டு கட்டணங்களுக்காக செலவிடப்பட்டிருக்கும் போது உரிய உத்தியோகத்தர் அந்த செயலமர்வில் பங்குபற்றியிருக்கவில்லை.

(viii) 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடை அதிகாரச்சட்டத்திற்கு முரணாக செயற்திட்ட சேவைக்காலம் 4 வருடங்கள் மாத்திரம் பூர்த்தி செய்து சேவையிலிருந்து நீக்கப்பட்ட மூன்று உத்தியோகத்தர்களுக்கு பணிக்கொடையாக ரூபா 911,247 தொகை மீளாய்வாண்டின் போது செலவிடப்பட்டிருந்தது.

(ix) செயற்திட்டத்தினால் மீளாய்வாண்டின் போது 2 வாகனங்களுக்கு ரூபா 1,440,000 வாடகை செலுத்தப்பட்டிருந்த போதிலும், அந்த வாகனங்கள் செயற்திட்டப் பணிகளுக்கு ஈடுபடுத்தப்பட்டமைக்கான சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(x) தாபன விதிக்கோவையின் IV ஆம் அத்தியாயத்தின் 3.3 ஆம் பிரிவின் படி 3 மாத காலத்திற்கு உட்பட்ட வகையில் பதில் கடமை நியமனம் வழங்க முடியுமான போதிலும், செயற்திட்டத்தின் நிதி முகாமையாளர் பதவியில் பதில் கடமை அடிப்படையில் அரசாங்க சேவையில் ஓய்வுபெற்ற உத்தியோகத்தரொருவர் நீண்ட காலமாக சேவையாற்றியிருந்தார். அந்த உத்தியோகத்தர் அந்த செயற்திட்டத்தின் மதியுரையாளராகவும் கடமையாற்றியமையால் அந்த கடமை செயற்பாடுகளிலும் வினைத்திறனாக நிறைவேற்றப்பட்டமை கணக்காய்வின் போது உறுதிப்படுத்தப்படவில்லை. அந்த உத்தியோகத்தருக்காக 2014 ஆம் ஆண்டின்போது ரூபா 892,667 தொகை சம்பளம் மற்றும் படிகளாக செயற்திட்டத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது.

**3.9 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

---

அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட சில கொடுக்கல் வாங்கல்கள் சர்ச்சைக்குரிய தனிமையிலானதாக இருந்தன. தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட அவ்வாறான சில கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) விளையாட்டுத்துறை அமைச்சிற்காக வெளிநாடு சென்றுள்ள உயர் கல்வி அமைச்சில் ஒப்பந்த அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்ட உத்தியோகத்தரொருவருக்கு அமையப் படிகள் மற்றும் வெப்ப உடை படிகளாக அமைச்சினால் ரூபா 117,159 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) உயர் கல்வி அமைச்சின் நோக்கங்களுக்கு புறம்பாக அமைச்சில் இல்லாத பால் பண்ணையாளர்களை வெளிநாட்டிற்கு அனுப்பி பயிற்சி வழங்குவதற்காக ரூபா 1,103,381 தொகை அமைச்சின் நிதியேற்பாடுகளிலிருந்து செலவிடப்பட்டிருந்தது.

(இ) 2014/2015 கல்வியாண்டிற்காக வழங்கப்பட்ட 219 வெளிநாட்டுப் புலமைப் பரிசில்களில் பொறுப்பேற்கப்பட்ட புலமைப் பரிசில்களின் எண்ணிக்கை 187 ஆகும். இதன் படி கையேற்கப்படாத 32 புலமைப்பரிசில்களின் எண்ணிக்கைகளில் 25 புலமைப் பரிசில்கள் இந்தியாவினால் வழங்கப்பட்டிருந்தது.

(ஈ) விளம்பரச் செலவினங்களுக்காக வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டில் நிதிஏற்பாடுகள் மேற்கொள்ளப்படாதிருக்கும் போது விடுதியை நிர்மாணிப்பதற்காக ஒதுக்கப்பட்ட நிதியேற்பாடுகளிலிருந்து தொலைக்காட்சி, வானொலி விளம்பர நடவடிக்கைகளுக்காக ரூபா 21,979,130 கூட்டுத்தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் அதற்காகப் பெறப்பட்ட முறையான அங்கீகாரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.10 மனித வள முகாமைத்துவம்

### (அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை | உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 33 | 19 | 14 |
| (ii) | மூன்றாம் நிலை | 2 | 1 | 1 |
| (iii) | இரண்டாம் நிலை | 134 | 71 | 63 |
| (iv) | ஆரம்ப நிலை | 45 | 34 | 11 |
| (v) | ஏனையோர் (அமைய/ தற்காலிக ஒப்பந்த/ அடிப்படை) | 6 | 4 | 2 |
| | மொத்தம் | 220 | 129 | 91 |

மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் 91 வெற்றிடங்களை நிரப்புவதற்கு அமைச்சு தவறியிருந்தது.

**(ஆ) ஏனைய தரப்பினர்களிடமிருந்து பெறப்பட்ட மனித வளங்கள்**

அமைச்சினால் பெற்றுக்கொள்ளப்பட்ட மனித வளங்கள் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| **ஊழியர் வகை** | **எண்ணிக்கை** | **ஏனைய தரப்பினர்** | **காலப்பகுதி** |
|---|---|---|---|
| அமைய தொழிலாளர் | 2 | இலங்கை உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவனம் | 2014 சனவரி முதல் திசெம்பர் வரை |
| முகாமைத்துவ உதவியாளர் | 11 | 21 ஆவது நூற்றாண்டிற்கான உயர் கல்வி செயற்திட்டம் | 2014 சனவரி முதல் திசெம்பர் வரை |

## 4. தலைப்பு 214- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

### 4.1 மனித வள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை | உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 58 | 43 | 15 |
| (ii) | மூன்றாம் நிலை | 27 | 24 | 03 |
| (iii) | இரண்டாம் நிலை | 155 | 99 | 56 |
| (iv) | ஆரம்ப நிலை | 53 | 48 | 05 |
| | மொத்தம் | 293 | 214 | 79 |

மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் 79 வெற்றிடங்களை நிரப்புவதற்கு ஆணைக்குழு தவறியிருந்தது.